# முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்!


# விடியல் பயிற்சி மையம்
## வேலூர்
செல்: 8122706441, 9092997509
www.vidiyalarni.blogspot.in


**GROUP – II (Prelims) MODEL QUESTION – General Tamil**

1. பொருத்துக

| | |
|---|---|
| a) Deputy | 1. பேராண்மைக் குழு |
| b) Deputation | 2. துணை அலுவலர் |
| c) Depraved | 3. மோசமான நடத்தையுடைய |
| d) Deprived | 4. வறுமையுற்ற |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 1 | 2 | 4 | 3 |

2. IMPROPER - என்ற ஆங்கிலச் சொல்லுக்கு கீழ்காணும் விடைகளில் எது சரியானது அல்ல?

A) நேர்மையற்ற B) ஒழுங்கு தவறிய C) முத்திரை D) இழிந்த

3. பொருந்தா இணையைக் கண்டறிக.

A) ISOTHERM - மாறும் வெப்பநிலைக் கோடு
B) ISLAND - நாற்புறமும் நீரால் சூழப்பட்ட நிலப்பகுதி
C) ISTHMUS - பூசந்தி
D) ISOLATION - ஒருவரைத் தனிமைப்படுத்துதல்

4. “ஏழிசைச் சங்கத்து இருந்தானும்” - இவ்வடியால் குறிக்கப்படுபவர்

A) சிவபெருமான் B) நளன் C) வீமராசன் D) கண்ணன்

5. தமிழ் நாட்டின் மாப்பசான் என அழைக்கப்படுபவர்?

A) புலமைப்பித்தன் B) புதுமைப்பித்தன் C) வாணிதாசன் D) மு. வரதராசனார்

6. பொருத்துக

| | | |
|---|---|---|
| a) கண்ணகி | - | 1. வயந்தமாலை |
| b) மாதவி | - | 2. தேவந்தி |
| c) காந்தருவதத்தை | - | 3. சுதமதி |
| d) மணிமேகலை | - | 4. ஆத்தாக்கிழவி |
| e) கண்ணுக்கினியாள் | - | 5. வீணாபதி |

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 5 | 2 | 4 |
| B) | 2 | 5 | 1 | 3 | 4 |
| C) | 4 | 3 | 1 | 2 | 5 |
| D) | 2 | 1 | 5 | 3 | 4 |

7. பொருத்துக

a) நறவம் — 1. கதிரவன் வழிபட்ட இடம் (வைத்தீசுவரன் கோவில்)

b) மதுரம் — 2. குழந்தை

c) மதலை — 3. தேன்

d) பருதிபுரி — 4. இனிமை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 4 | 3 | 2 | 1 |

8. பொருத்துக.

a) சிங்கம் கனைத்தது — 1. எண்வழு

b) கண்ணன் படித்தாள் — 2. திணை வழு

c) இன்று வருவான் — 3. மரபு வழு

d) கபிலன் பேசியது — 4. கால வழு

e) பறவைகள் பறந்தது — 5. பால் வழு

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 5 | 4 | 1 | 3 |
| B) | 3 | 5 | 4 | 2 | 1 |
| C) | 5 | 3 | 2 | 1 | 4 |
| D) | 2 | 3 | 5 | 4 | 1 |

9. பொருத்துக.

a) போதன் — 1. தயரதன்

b) வாசவன் — 2. சிவபெருமான்

c) ஏந்தல் — 3. இந்திரன்

d) மன் — 4. சிறந்தோன் (இராமன்)

e) மதோன்மத்தன் — 5. பிரமன்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A) | 5 | 3 | 4 | 1 | 2 |
| B) | 3 | 5 | 1 | 4 | 2 |
| C) | 3 | 5 | 4 | 1 | 2 |
| D) | 1 | 4 | 3 | 5 | 2 |

விடியல் வேலூர்

10. பொருத்துக.

| | |
|---|---|
| a) மறுகுதல் | 1. வானம் |
| b) விண் | 2. மத்தளம் |
| c) முழவு | 3. சுழலுதல் |
| d) எரிமருள் வேங்கை | 4. நெருப்பையொத்த வேங்கை மரம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 3 | 1 | 2 | 4 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 4 | 2 | 3 | 1 |

11. “நிகரென்று கொட்டு முரசே - இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
தகரென்று கொட்டு முரசே - பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்” - எனப் பாடியவர்

A) பாரதியார் B) பாரதிதாசன் C) சுப்பிரமணியம் D) A மற்றும் C

12. “நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்” - என்றுப் பாடியவர்

A) பாரதிதாசன் B) கண்ணதாசன் C) முத்தையா D) B மற்றும் C

13. கீழ்காண்பவற்றுள் எது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையல்ல?

A) வழிக்கரை B) திரைக் கங்கை C) நீர்த்தடம் D) வள்ளுகிர்ப்புலி

14. பொருந்தா ஒன்றை தேர்வு செய். “உரிச்சொற்றொடர்”

A) மாதவர் B) நின்கேள் C) நனிகடிது D) மல்லலம் குருத்து

15. “நின்பணி” - என்பதன் இலக்கணக் குறிப்பைத் தேர்க.

A) நான்காம் வேற்றுமைத் தொகை B) ஐந்தாம் வேற்றுமைத் தொகை

C) ஆறாம் வேற்றுமைத் தொகை D) ஏழாம் வேற்றுமைத் தொகை

16. பகுபத உறுப்பிலக்கண அமைப்புப்படி பின்வரும் சொற்களில் தவறான பிரித்தறிதலைக் கண்டறிக.

A) குறுகினன் = குறுகு + இன் + அன்

B) புக்கான் = புகு (புக்கு) + ஆன்

C) உரையார் = உரை + ய் + (ஆ) + ஆர்

D) உண்டனெம் = உண் + ட் + அன் + அம்

17. பொருத்துக.

| | |
|---|---|
| a) அணித்து | 1. அறிவு |
| b) புந்தி | 2. வெற்றி |
| c) வென்றி | 3. மகிழ்ச்சி |
| d) மாதிரம் | 4. அருகில் |
| e) புளகிதம் | 5. மலை |

விடியல் வேலூர்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 5 | 3 |
| B) | 4 | 3 | 2 | 1 | 5 |
| C) | 3 | 1 | 2 | 5 | 4 |
| D) | 4 | 1 | 2 | 5 | 3 |

18. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) வண்டோ பறந்ததோ போனது பழந்தான்

B) பறந்ததோ வண்டோ போனது பழந்தான்

C) போனது பழந்தான் பறந்ததோ வண்டு

D) போனது வண்டோ பறந்ததோ பழந்தான்

19. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) ஊரினை உலகினை இந்த நாட்டை ஒன்று சேர்க்கப்

B) ஊரினை நாட்டை இந்த உலகினை ஒன்று சேர்க்கப்

C) உலகினை ஊரினை இந்த நாட்டை ஒன்று சேர்க்கப்

D) ஒன்று ஊரினை நாட்டை இந்த உலகினை சேர்க்கப்

20. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) புகழெனின் உயிரும் கொடுக்குவர்
கொள்ளலர் பழியெனின் உலகுடன் பெறினும்

B) உயிரும் கொடுக்குவர் புகழெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் பழியெனின்

C) புகழெனின் உயிரும் கொடுக்குவர்
பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்

D) பழியெனின் உயிரும் கொடுக்குவர்
புகழெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்

21. தவறானதைச் சுட்டுக.

A) திரை கடலோடியும் தேடு திரவியம்

B) வரவுக்கு தகுந்த செலவு மாப்பிள்ளைக்கு தகுந்த மஞ்சம்

C) கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு

D) உழுதவன் கணக்குப் பார்த்தால் தார்க்குச்சி மிஞ்சாது

22. தவறானதைச் சுட்டுக.

A) சூரியனைக் கண்ட தாமரைப்போல

B) பூமியைப்போல பொறுமை வேண்டும்

C) ஐப்பசியில் காற்றடித்தால் ஆடியில் மழை பெய்யும்

D) உள்ளூர்ப் பெண்ணும் அயலூர் மண்ணும் ஆகாது

விடியல் வேலூர்

23. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க.

A) குறிஞ்சி, மருதம், பாலை, கேண்மை, ஞாலம்

B) குறிஞ்சி, ஞாலம், கேண்மை, பாலை, மருதம்

C) கேண்மை, குறிஞ்சி, ஞாலம், பாலை, மருதம்

D) குறிஞ்சி, கேண்மை, ஞாலம், பாலை, மருதம்

24. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க.

A) மாதர், மடவார், பெண்டிர், மன்பழி, மல்லல்

B) மல்லல், மன்பழி, மாதர், மடவார், பெண்டிர்

C) மடவார், மன்பழி, மல்லல், மாதர், பெண்டிர்

D) பெண்டிர், மடவார், மல்லல், மன்பழி, மாதர்

25. ஐஅரி <u>உண்கண்</u> - இதில் “உண்கண்” என்பதன் சரியான இலக்கணக் குறிப்பு?

A) பண்புத் தொகை B) வினைத் தொகை C) உவமைத் தொகை D) உருவகம்

26. பொருத்துக.

a) வைவாள் - 1. வினைத் தொகை

b) நிறைமதி - 2. உருவகம்

c) கண்ணீர் வெள்ளம் - 3. ஆகுபெயர்

d) அம்மா - 4. உரிச் சொற்றொடர்

e) உள்ளம் - 5. வியப்பிடைச் சொல்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 5 | 3 |
| B) | 4 | 1 | 2 | 3 | 5 |
| C) | 4 | 1 | 2 | 5 | 3 |
| D) | 1 | 4 | 2 | 3 | 5 |

27. பொருந்தா ஒன்றைத் தேர்வு செய்.

A) கண்ணுதல் - இலக்கணப் போலி

B) முக்குடை - பண்புத் தொகை

C) அறிவார் தொழில் - வினைத் தொகை

D) விருந்து - பண்பாகு பெயர்

28. ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய அறுவகைப் பொருள்களில் வருவது?

A) இரண்டாம் வேற்றுமை B) மூன்றாம் வேற்றுமை

C) நான்காம் வேற்றுமை D) ஐந்தாம் வேற்றுமை

29. பொருத்தம் இல்லாத ஒன்றைத் தேர்வு செய்?

A) மணியில் ஒலி B) வீட்டின்கண் பூனை

C) பாரிக்கு நண்பர் கபிலர் D) அவனுக்கு என்மேல் வெறுப்பு

30. பெயர்ச் சொல்லின் வகை அறிக.

அழகு, முகம்

A) தொழிற்பெயர், சினைப்பெயர் B) பண்புப்பெயர், பொருட்பெயர்

C) குணப்பெயர், இடப்பெயர் D) பண்புப்பெயர், சினைப்பெயர்

31. விடைக்கேற்ற வினாவைத் தேர்க:

" கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா"

A) கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?

B) முத்தையா யார்?

C) கண்ணதாசனா, முத்தையா?

D) முத்தையா என்ற இயற்பெயரைக் கொண்டவரா கண்ணதாசன்?

32. "இராமானுஜன்தான் இந்த இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய கணித மேதை" - என்றவர்

A) லிட்டில்வுட் B) இந்திரா காந்தி

C) பேரா ஈ.டி பெல் D) பேராசிரியர் சூலியன் கக்சுலி

33. "மொய்யிலைவேல் மாறன் களிறு" - இதில் "இலைவேல்" என்பதன் சரியான இலக்கணக் குறிப்பு?

A) ஆறாம் வேற்றுமைத் தொகை B) உவமைத் தொகை

C) உருவகம் D) வினைத் தொகை

34. பின்வரும் இலக்கணக் குறிப்புக்கு பொருந்தாத சொல்லைக் கண்டறிக:

"வினையெச்சம்"

A) கடக்க B) ஓடி C) இளைத்து D) வியர்த்த

35. பொருத்துக.

| | |
|---|---|
| a) இனிப்பு | 1. வளம் |
| b) கார்ப்பு | 2. உணர்வு |
| c) துவர்ப்பு | 3. ஆற்றல் |
| d) உவர்ப்பு | 4. மென்மை |
| e) கைப்பு | 5. இனிமை |
| f) புளிப்பு | 6. தெளிவு |

| | a | b | c | d | e | f |
|---|---|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 6 | 4 | 5 |
| B) | 2 | 1 | 3 | 6 | 4 | 5 |
| C) | 3 | 2 | 1 | 5 | 4 | 6 |
| D) | 6 | 4 | 5 | 3 | 1 | 2 |

36. அகரவரிசைப்படுத்துக.

A) அஞ்சல், அன்னம், அன்பு, அழித்தல், ஒத்தல்

B) அஞ்சல், அழித்தல், அன்பு, அன்னம், ஒத்தல்

C) அஞ்சல், அன்பு, அன்னம், அழித்தல், ஒத்தல்

D) ஒத்தல், அழித்தல், அன்னம், அன்பு, அஞ்சல்

37. பிரித்தெழுதுக: வெந்நீர்

A) வெண்மை + நீர் B) வெம்மை + நீர் C) வெம் + நீர் D) வெண் + நீர்

38. பிரித்து எழுதுக: “ஆரளவு“

A) ஆர + அளவு B) ஆர் +அளவு C) அரு + அளவு D) அருமை + அளவு

39. பொருத்துக.

a) பொருட் பெயர்ப் பகுபதம் - 1. சென்னையான்

b) இடப்பெயர்ப் பகுபதம் - 2. மூக்கன்

c) காலப்பெயர்ப் பகுபதம் - 3. பொன்னன்

d) சினைப்பெயர்ப் பகுபதம் - 4. சித்திரையான்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 2 | 3 | 1 | 4 |

40. பொருள்கோள் எத்தனை வகைப்படும்?

A) 6 B) 7 C) 8 D) 5

41. சரியானவற்றைத் தேர்ந்தெடு

i) வியங்கோள் வினைமுற்றுக்குப்பின் வல்லினம் மிகாது

ii) இருபெயரொட்டு பண்புத்தொகையில் வல்லினம் மிகாது

iii) அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப்பின் வல்லினம் மிகாது

iv) அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களை அடுத்து வல்லினம் மிகாது

இவற்றுள்

A) I, II மட்டும் சரி B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி D) IV மட்டும் தவறு

42. சந்திப் பிழையற்ற தொடரைக் காண்க

A) கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

B) கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

C) கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

D) கயிறுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

43. தவறான பிரித்தறிதலை கண்டறிக.

A) செலவழித்தான் - செலவு + அழித்தான்

B) பூங்கொடி - பூம் +கொடி

C) மேல்நாடு - மேற்கு + நாடு

D) வடமேற்கு - வடக்கு + மேற்கு

விடியல் வேலூர்

44. செயப்பாட்டு வினையைக் கண்டறிக.

A) ஆசிரியர் மறுப்புரை எழுதினார்
B) பகைவர்கள் இன்றோடு ஒழிக
C) பறவைகள் பறக்கா
D) கூடு குருவியால் கட்டப்பட்டது

45. சரியான பிரித்தறிதலை கண்டறிக.

A) சின்னாள் - சில + நாள்
B) அங்கண் - அங் + கண்
C) புன்கண் - புன் + கண்
D) எம்மருங்கும் - எம் + மருங்கும்

46. “எடுமெடு மெடுமென எடுத்ததோர்
இகலொலி கடலொலி மிகக்கவே” - பாடலடிகள் இடம்பெறும் நூல்?

A) கலிங்கத்துப் பரணி
B) திருப்புகழ்
C) தேவாரம்
D) கம்பராமாயணம்

47. பொருந்தா ஒன்றைத் தேர்க: : “அன்மொழித் தொகை”

A) திண்டிறல் நோக்கினான்
B) வண்டுறை ஓதியும் வலியள்
C) தாமரை நயனத்தான்
D) பெருந்தடந்தோள்

48. சரியான சொற்றொடரை தேர்ந்தெடு

A) அவ்விதழ் கமழப் பொழுதறிந்து அவிழ்பதங்
B) அவ்விதழ் அவிழ்பதங் கமழப் பொழுதறிந்து
C) அவிழ்பதங் பொழுதறிந்து அவ்விதழ் கமழப்
D) அவிழ்பதங் அவ்விதழ் கமழப் பொழுதறிந்து

49. “நின்கேள்” - என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) மூன்றாம் வேற்றுமைத் தொகை
B) நான்காம் வேற்றுமைத் தொகை
C) ஐந்தாம் வேற்றுமைத் தொகை
D) ஆறாம் வேற்றுமைத் தொகை

50. பொருத்தம் இல்லாத ஒன்றைத் தேர்வு செய்

A) கதிர்வேல் வெற்றிலை தின்றான் - இனங்குறித்தல்
B) இம்மாடு வயலில் உழுகிறது - ஒன்றொழி பொதுச்சொல்
C) மீமிசை ஞாயிறு - ஒருபொருட் பன்மொழி
D) சோறு உண்டான் - ஒன்றொழி பொதுச்சொல்

51. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு.
“நீதிநெறி வழுவாமல் நிற்க வேண்டும்”

A) எதனை வழுவாமல் நிற்க வேண்டும்?
B) எப்படி நிற்க வேண்டும்?
C) நீதிநெறியோடு நிற்க வேண்டுமா?
D) எப்படி வாழ வேண்டும்?

52. எது சரியாகப் பொருந்தவில்லை?

A) இன்று ஒன்று நன்று - கல்யாண்ஜி

B) கடற்கரையில் சில மரங்கள் - ஞானக் கூத்தன்

C) கொட்டியும் ஆம்பலும் - சாலை இளந்திரையன்

D) இமயம் எங்கள் காலடியில் - கலாப்ரியா

53. "நன்னுத லவள்நின்கேள்" - இங்கு "நன்னுதல்" என்பதன் சரியான இலக்கணக் குறிப்பு?

A) பண்புத்தொகை B) வினைத்தொகை

C) அன்மொழித் தொகை D) உம்மைத் தொகை

54. திருக்குறள் அறத்துப்பாலின் அதிகாரங்களின் எண்ணிக்கை

A) 38 B) 70 C) 25 D) 1330

55. "நீருக்குள் பாசிபோல" - பொருத்தமான வாக்கியத்தினை தேர்ந்தெடுக்க.

A) தந்தை இறந்த செய்தி மனதை ஆழ துன்புறுத்தியது

B) மாணிக்கமும் சிவாவும் யாருடனும் சேர்ந்து செயல்பட மாட்டார்கள்

C) அறிவழகனும் தமிழ்ச்செல்வனும் உற்ற நண்பர்கள்

D) ஆசிரியர் நடத்திய பாடம் நன்கு பதிந்தது

56. "எடு" - என்னும் வேர்ச் சொல்லின் வினையாலணையும் பெயர் காண்:

A) எடுத்த B) எடுத்து C) எடுத்தல் D) எடுத்தவன்

57. கீழ்வரும் கூற்றுகளை ஆய்க

(i) வானவெளியின் மிகப் பெரிய விண்மீன் - வியாழன்

(ii) தானே ஒளிவிடக்கூடிய ஞாயிறு - நாள்மீன்

(iii) ஞாயிற்றிடமிருந்து ஒளிபெற்று ஒளிரக்கூடியது - கோள்மீன்

(iv) திங்கள் தானே ஒளி வீசுவதில்லை என்ற வானியல் உண்மையை வெளிப்படுத்தும் - திருக்குறள் இவற்றுள்

A) I தவறு II, III, IV சரி B) I, II, III சரி IV தவறு C) I, IV சரி II, III தவறு D) I, IV தவறு II, III சரி

58. கூத்து வகைகளைப் பற்றியும் நாடக நூல்களைப் பற்றியும் தமது உரையில் குறிப்பிட்ட சிலப்பதிகார உரையாசிரியர்

A) அடியார்க்கு நல்லார் B) அரும்பத உரையாசிரியர்

C) நா.மு.வேங்கடசாமி நாட்டார் D) புலியூர் கேசிகன்

59. கூற்றுகளை ஆராய்க

i) சார் பெழுத்துக்கள் பத்து வகைப்படும் (நன்னூல்)

ii) சுக்கு, மிளகு, திப்பிலி ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம்

iii) நான்கு நீதி மணிகளால் ஆகியவற்றால் பாடல்களைக் கொண்டது நான்மணிக்கடிகை

iv) போர்க்களம் பாடியதைச் சொல்வது - களவழி நாற்பது ; இவற்றுள்

A) அனைத்தும் சரி B) III மட்டும் தவறு C) IV மட்டும் தவறு D) I மட்டும் சரி

விடியல் வேல்ஸ்

60. பொருத்துக.

a) திரைக்கவித்திலகம் — 1. அ. வரதநஞ்சையப்பிள்ளை

b) கல்வியில் பெரியவர் — 2. தாராபாரதி

c) பாவலரேறு — 3. கம்பர்

d) புலவரேறு — 4. அ. மருதகாசி

e) கவிஞாயிறு — 5. பெருஞ்சித்திரனார்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 5 | 2 |
| B) | 4 | 3 | 5 | 1 | 2 |
| C) | 3 | 4 | 5 | 1 | 2 |
| D) | 3 | 4 | 1 | 2 | 5 |

61. பொருத்தம் இல்லாத ஒன்றைத் தேர்வு செய் - “ ஒலி மரபுச் சொற்கள்”

A) கூகை குழறும் B) கிளி பேசும் C) வானம்பாடி பாடும் D) பன்றி முரலும்

62. மரபுப் பிழைகளை நீக்குக.

A) எலிக்குட்டி B) எலிப்பிள்ளை C) எலிக்குஞ்சு D) எலிக்கன்று

63. பொருத்துக.

| பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| a) ஐதீகம் | 1. உலக வழக்கு |
| b) இருதயம் | 2. நெஞ்சகம் |
| c) குபேரன் | 3. பெருஞ்செல்வன் |
| d) உபயம் | 4. திருப்பணியாளர் கொடை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 1 | 4 | 3 | 2 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 1 | 2 | 3 | 4 |

64. பொருத்துக.

a) முதற்போலி — 1. பந்தர்

b) இடைப்போலி — 2. மைஞ்சு

c) இறுதிப்போலி — 3. அஞ்சு

d) முற்றுப்போலி — 4. அரைசியல்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 1 | 4 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 2 | 4 | 3 | 1 |
| D) | 4 | 2 | 1 | 3 |

விடியல் வேலூர்

65. பொருந்தா ஒன்றைக் காண் - “ வினாத் தொடர்”

A) உன் இருப்பிடம் எங்கு உள்ளது?

B) முயன்றால் அனைத்தும் முடியும்?

C) உன்னிடம் திருக்குறள் புத்தகம் உள்ளதா?

D) “தென்னாட்டின் ஜான்சிராணி” என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்?

66. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு.

“சங்க காலத்தில் ஓவியங்களை கண்ணெழுத்து என அழைத்தனர்”

A) கண்ணெழுத்து என அழைக்கப்பட்டவை எவை?

B) சங்க காலத்தில் ஓவியங்களை எவ்வாறு அழைத்தனர்?

C) சங்க கால ஓவியங்கள் கண்ணெழுத்துக்களா?

D) சங்க கால பழக்கம் - ஓவியங்களை கண்ணெழுத்து எனக் கூறுவதா?

67. “எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப் பரணியே” என்றவர்

A) அண்ணா B) நேரு C) காந்தி D) இந்திரா காந்தி

68. கூற்றுகளை ஆராய்க.

i) நிகண்டுகளில் பழமையானது - சேந்தன் திவாகரம்

ii) நிகண்டுகளில் சிறப்பானது - சூடாமணி நிகண்டு

iii) தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் முன்னோடி - அபிதான சிந்தாமணி

iv) அபிதான கோசம் 1934-ல் சிங்காரவேலனாரால் தொகுத்து வெளியிடப்பட்டது - இவற்றுள்

A) அனைத்தும் சரி B) I, II மட்டும் சரி C) III, IV மட்டும் சரி D) III மட்டும் தவறு

69. பாரதிதாசன், “ தமிழ் என் உயிர் என்பேன்” என்றார் - எவ்வகை வாக்கியம் எனச்சுட்டுக?

A) நேர்க்கூற்று வாக்கியம் B) அயர்க்கூற்று வாக்கியம்

C) கட்டளை வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்

70. பொருத்துக.

| பொருள் | தொகுப்பிடம் |
|---|---|
| a) சோளம் | 1. தோப்பு |
| b) தேயிலை | 2. காடு |
| c) தென்னை | 3. கொல்லை |
| d) ஆலமரம் | 4. தோட்டம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 4 | 3 | 1 | 2 |
| D) | 4 | 2 | 1 | 3 |

விடியல் வேலூர்

71. "மானம் பெரிதென உயிர்விடுவான்; மற்றவர்க் காகத் துயர்ப்படுவான்
தானம் வாங்கிடக் கூசிடுவான்; தருவது மேல் எனப் பேசிடுவான்" - என்றுப் பாடியவர்

A) பாரதியார் B) பாரதிதாசனார் C) வள்ளலார் D) நாமக்கல் கவிஞர்

72. பொருந்தா ஒன்றை தேர்வு செய்.

A) "சும்மா இருப்பதே சுகம்" தாயுமானவர்

B) "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும் - வள்ளலார்

C) "நந்தவனத்தில் ஓர் ஆண்டி-கடுவெளிச் சித்தர்

D) "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" - இராமலிங்க அடிகள்

73. பொருந்தா ஒன்றை தேர்வு செய்

A) வினா வெண்பா B) போற்றிப் பஃறொடை வெண்பா

C) கொடிக்கவி D) திருக்குறுந் தாண்டகம்

74. கலித் தொகைக்கு வழங்கப்படும் வேறு பெயர்?

A) கலி B) நூற்றைம்பது கலி C) முதுகலி D) அனைத்தும் சரி

75. பொருந்தா ஒன்றை தேர்வு செய்க.

A) "கடலினும் பெரிது எமக்கு அவருடைய நட்பே" - ஐங்குறுநூறு

B) "அரிகால் மாறிய அங்கன் அகல்வயல் நட்பே - நற்றிணை

C) "நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று" - அகநானூறு

D) "சான்றோர் பலர் ஆப சாலார் சாலார் பாலர் ஆகுபவே" - புறநானூறு

76. பொருத்துக.

| நூல் | நூலாசிரியர் |
|---|---|
| a. கார் நாற்பது - | 1. மாறன் பொறையனார் |
| b. ஐந்திணை ஐம்பது - | 2. புல்லங்காடனார் |
| c. ஐந்திணை அறுபது - | 3. கண்ணன் கூத்தனார் |
| d. திணை மொழி ஐம்பது - | 4. கண்ணஞ் சேந்தனார் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 3 | 1 | 2 | 4 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 4 | 2 | 1 | 3 |

77. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. | குறிஞ்சி | - 1. வஞ்சி |
| b. | முல்லை | - 2. உழிகை |
| c. | மருதம் | - 3. தும்பை |
| d. | நெய்தல் | - 4. வெட்சி |
| e. | பாலை | - 5. வாகை |
| f. | பெருந்திணை | - 6. காஞ்சி |
| g. | கைக்கிளை | - 7. பாடாண் திணை |

விடியல்
வேலூர்

| | a | b | c | d | e | f | g |
|---|---|---|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 3 | 2 | 5 | 6 | 7 |
| B) | 3 | 2 | 1 | 4 | 5 | 6 | 7 |
| C) | 3 | 1 | 2 | 4 | 6 | 5 | 7 |
| D) | 4 | 1 | 2 | 3 | 5 | 6 | 7 |

78. “உலகெலாம்” என்று இறைவன் அடியெடுத்துக் கொடுக்க பாடப்பட்ட நூல்

A) பெரியபுராணம் B) திருத்தொண்டகத் தொகை

C) திருத்தொண்டர் மாக்கதை D) A மற்றும் C

79. பொருந்தா ஒன்றை தேர்வு செய்க.

A) ஐந்தாம் வேதம் - மகாபாரதம்

B) தமிழில் எழுதப்பட்ட முதல் ஐந்திலக்கண நூல் - வீரசோழியம்

C) குட்டித் தொல்காப்பியம் - தொன்னூல் விளக்கம்

D) குட்டித் திருவாசகம் - நேமிநாதம்

80. பின்வரும் குறள் எந்த வாய்ப்பாட்டினைக் கொண்டு முடிந்துள்ளது?

“நாடென்பா நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு”

A) நாள் B) மலர் C) காசு D) பிறப்பு

81. பின்வரும் குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி

“பீலிபெய் சாக்காடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்”

A) வஞ்சப்புகழ்ச்சி அணி B) இரட்டுறமொழிதல் அணி

C) பின்வருநிலை அணி D) பிறிது மொழிதலணி

82. சரியானவற்றைத் தேர்ந்தெடு

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

i) சீர்மோனை, சீர் எதுகை வந்துள்ளது ii) அடி எதுகை, அடி மோனை வந்துள்ளது

iii) அடி இயைபு வந்துள்ளது iv) கீழ்க்கதுவாய் மோனை வந்துள்ளது. இவற்றுள்

A) அனைத்தும் சரி B) III மட்டும் தவறு C) II மட்டும் தவறு D) iv மட்டும் தவறு

83. “ மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு”; - பின்வருவனவற்றுள் சரியானதைச் சுட்டுக.

A) ஒரூஉ எதுகை வந்துள்ளது

B) இணை மோனை வந்துள்ளது

C) ஒரூஉ இயைபு வந்துள்ளது

D) அனைத்தும் சரி

விடியல் சேகர்

84. பொருந்தா இணையைக் கண்டறிக

A) நாடக உலகின் இமயமலை - சங்கரதாசு சுவாமிகள்

B) தமிழ் நாடகத் தலைமையாசிரியர் - தி. க. சண்முகனார்

C) தமிழ் நாடகத் தந்தை - பம்மல் சம்பந்தனார்

D) தமிழ் நாடக மறுமலர்ச்சி தந்தை - கந்தசாமி

85. பின்வரும் பாடலில் உள்ள எதிர்ச் சொல் எது?

'தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்'

A) மனம் x மார்பு B) விழும் x எழும் C) தொண்டு x தொழும் D) விழும் x தொழும்

86. பின்வரும் குறளில் உள்ள எதிர்ச்சொல் எது?

"ஆகா றளவிட்டி தாயினுங் கோடில்லை
போகா றகலாக் கடை"

A) கேடு x கடை B) ஆகாறு x போகாறு

C) இட்டியது x ஆகாறு D) அகலம் x போகாறு

87. பொருந்தா ஒன்றை தேர்வு செய்க-"உவமையாகுபெயர்

A) பாவை B) வெண்களை C) கோதை D) காளை

88. மோசிக் கீரனாருக்கு கவரி வீசிய மன்னன்

A) கரிகாலன் B) சேரன் செங்குட்டுவன்

C) சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை D) பாண்டியன் நெடுஞ்செழியன்

89. "இலமென்று <u>அசைஇ</u>" இருப்பாரைக் காணின்" அடிக் கோடிட்டதின் சரியான இலக்கணக்குறிப்பு

A) அளபெடை B) தொழிற்பெயர்

C) பண்புப் பெயர் D) சொல்லிசையளபெடை

90. "<u>நடுகல்</u>" வணக்கம் பற்றி தொல்காப்பியம் கூறுகிறது?" - அடிக் கோடிட்டதின் வேர்ச்சொல்லைக் காண்க?

A) நடுக B) நடு C) நடத்த D) நடந்து

91. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை அறிதல்:

| காண் | கான் |
|---|---|
| A) காடு | பார் |
| B) பார் | காடு |
| C) அழகு | ஓரிடைச்சொல் |
| D) மணம் | கான்யாறு |

92. பொருத்தமற்றதைத் தேர்வு செய்க

A) பித்தத்தைப் போக்குவது - கொத்தமல்லி B) வளியை வெளியேற்றுவது - பெருங்காயம்

C) நீர்க்கோவையை நீக்குவது - தேங்காய் D) தொண்டைக் கட்டைத் தொலைப்பது - சீரகம்

93. பொருத்துக.

a. ஆ 1. சிவப்பு, காளை, இடபராசி

b. ஓ 2. விலங்கின் பெண்பொது, பசு, எருது

c. வை 3. சோர்வு, பேய், சாகாடு

d. சா 4. கூர்மை, வையகம், வைத்தல்

e. சே 5. மகிழ்ச்சி, மடையடைக்குங் கதவு

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A) | 5 | 4 | 3 | 1 | 2 |
| B) | 2 | 5 | 4 | 3 | 1 |
| C) | 4 | 5 | 3 | 2 | 1 |
| D) | 2 | 5 | 4 | 1 | 3 |

94. "நில்லா உலகம் புல்லிய நெறித்தே போல்" உவமையால் விளக்கும் பொருள்

A) இரங்காமை B) நிலையாமை

C) அழிவு D) அழியாமை

95. "பற்று மரமில்லாக் கொடிபோல"

A) ஆதரவு B) ஆதரவின்மை

C) ஏமாற்றம் D) இன்பம்

96. பொருந்தா ஒன்றை தேர்ந்தெடு

A) கோவில் பெருச்சாளி - பொதுச் சொத்தைத் திருடித் தின்பவன்

B) மனப்பால் குடித்தல் - கற்பனை செய்தல்

C) மதில்மேல் பூனை - நிச்சயமானது

D) ஆகாயத் தாமரை - இல்லாத ஒன்று

97. ஒருமை-பன்மை பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.

i. ஆமைகள் வேகமாக ஓடாது

ii. ஆமைகள் வேகமாக ஓடா

iii. காலிழந்த ஆண்கள் அறுவரும் கையிழந்த பெண்களும் மருத்துவமனையில்

iv. ஆறு காலிந்த ஆண்களும் நான்கு கையிழந்த பெண்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்

இவற்றுள்

A) i, iv சரி B) i, iii சரி C) ii, iv சரி D) ii, iii சரி

98. பொருந்தாத ஒன்றை தேர்வு செய்க. "செய்தித் தொடர்"

A) கவியரசி பரிசு பெற்றாள் B) மூத்தோர் சொல் கேள்

C) முருகன் சிறப்பாகச் சொற்பொழிவாற்றினான் D) இளமையில் கற்க வேண்டும்

விடியல்
சேலம்

99. எவர், இரவும் பகலும் அயராது படிக்கிறாரோ, அவரே உயர் மதிப்பெண்கள் பெறுவார்-எவ்வகை தொடர்?

A) கலவைத் தொடர்	B) அயற்கூற்றுத் தொடர்

C) வினாத் தொடர்	D) நேர்க்கூற்றுத் தொடர்

100. "பொருந்தா ஒன்றைத் தேர்வு செய்" - நேர்க்கூற்றுத் தொடர்"

A) கவி முருகனிடம் "நான் நாளை மதுரைக்குச் செல்வேன்" என்றான்

B) ஆசிரியர், "வேலா இலக்கணத்தை நன்றாகப்படி" என்று கூறினார்

C) "நான் திருக்குறளைக் கற்றேன் : வாழ்வில் உயர்ந்தேன்" என்று தலைவர் கூறினார்

D) நம்பி எழிலிடம் தானும் அவன் கருத்தைத் தெரிந்துக் கொள்ள ஆசைப்படுவதாகக் கூறினான்.

வாழ்த்துகள்!


# TNPSC VAO
# GROUP – I
# GROUP – II A
# TN TET PAPER I & II

## ஆகிய தேர்வுகளுக்கு விரைவில் பயிற்சி வகுப்புகள் தொடக்கம்

## இடம்:

# விடியல் பயிற்சி மையம்

M.T.C. வளாகம்,

C.M.C கண் மருத்துவமனை அருகில்,

வேலூர். CELL : 9092997509